உ
சிவமயம்
ஓம் சிவ சிவ



காரைநகர் மேற்கு வலந்தலையை பிறப்பிடமாகவும் கருங்காலியை
வசிப்பிடமாகவும் 131A2/1, புதுச் செட்டித்தெரு கொழும்பு-13
கலாபவனத்தில் வசித்து வந்தவருமாகிய
அமரர் உயர்திரு

**தில்லையம்பலம் சிவசம்பு** அவர்களின்

நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓம்
சிவ சிவ
இறைவன் மகா பெரியவன்

# சமர்ப்பணம்




மனிதருள் மாணிக்கமாய் அன்பும், பண்பும், மதிப்பும்
நிறைந்த நண்பனாய் இன்சொற்பேசி உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள் குடும்பத்தினருடன் அன்புடனும்,
பண்புடனும், பாசத்துடனும் இப்பாரில் வையத்துள்
வாழ்வாங்கு வாழ்ந்து எமக்கு நல்வழி புகட்டி எங்களை
வாழ வைத்த அன்புத் தந்தை
அமரர் உயர்திரு **தில்லையம்பலம் சிவசம்பு**
அவர்களின் திருவடிகளுக்கு இத் திருமலரைக் கண்ணீர்
காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி: ஓம் சாந்தி: ஓம் சாந்தி:
என்றும் உங்கள் நினைவுடன்
*பிரியமுள்ள*
**பிள்ளைகள், குடும்பத்தினர்.**
**கலாபவனம்**
**14.08.2010**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம்

ஓஓஓம்மம்
சத்தம் இல்லாத சத்தம்
பிரபஞ்சத்தின் மைய நாதம்
இயற்கையின் இன்ப இசை
வானத்தின் வார்த்தை
வெளியின் ஒலி
வாழ்வின் குறியீடு

அமைதியின் ஆனந்த நடனம்
ஆறு புலன்களாலும் அனுபவிக்கலாம்
வெளியில் இருந்தல்ல
உள்ளிருந்து மட்டும்
பார்க்கலாம் கேட்கலாம்
உணரலாம் இரசிக்கலாம்
ஆடலாம் அனுபவிக்கலாம்

நான்
அழியும் போது
சிந்தனைகள் இல்லை
எதிர்பார்ப்புகள் இல்லை
ஆசைகள் இல்லை
கனவுகள் இல்லை
நானும் இல்லை!
ஓம்!
மட்டும் வாழும் என்னுள்
என்னில் என்னைச் சுற்றி
எதிலும் எல்லாவற்றிலும் வாழும்
பிரபஞ்சத்தின் இயற்கையின்
இரகசிய இசை

ஓம்

ஓஓஓம்மம்
ஓஓஓம்ம்ம
ஓஓஓம்ம்ம்



உ
சிவமயம்
ஓம் சிவ சிவ

அமரர் உயர்திரு
## தில்லையம்பலம் சிவசம்பு
Retired Chief Assistant Head Reader
Govt.Press, Borella, Colombo-8



| அன்னைமடியில் | சிவனடியில் |
|---|---|
| 08.06.1933 | 15.07.2010 |

**திதி வெண்பா**

சீர்மிகு காரைநகர் உயர்திரு தில்லையம்பலம்
சிவசம்பு பார்புகழ் வாழ்வு வாழ்ந்து பந்த பாசம்
விட்டு விகிர்தி வருட ஆனி முப்பத்தியோராம் நாள்
பூர்வபக்க அமிர்த சித்த சதுர்த்தசியில் காரை சிவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
ஓம் நமசிவாய

# 4வது ஆண்டு நினைவு அஞ்சலி

காரைநகர் வாரிவளவை பிறப்பிடமாகவும் கருங்காலி கேசடை வீதியை வசிப்பிடமாகவும் இல.131A2/1, புதுச் செட்டித்தெரு, கொழும்பு-13 கலாபவனத்தில் வசித்து வந்தவருமாகிய

அமரர்

## திருமதி சிவசம்பு பாக்கியம்



**மண்ணுலகு**
**05.06.1934**

**விண்ணுலகு**
**30.06.2006**

எம்மை எல்லாம் பெற்று வளர்த்து ஆளாக்கிய எமது அன்புத் தாயே
எத்தனை வருடங்கள் சென்றாலும் உம்மை நாம் ஒருபோதும் மறவோம்
உமது ஆத்மா சாந்தி அடைந்து முத்திபெற வேண்டி எல்லாம் வல்ல
தில்லை நடராசப் பெருமானின் திருவருளை வேண்டி வழிபடுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**என்றும் உங்கள் நினைவுடன்**
**பிரியமுள்ள**
**பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.**
**கலாபவனம்**
**14.08.2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

**திருச்சிற்றம்பலம்**

**விநாயகர் வணக்கம்**

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

திருவுங் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

முன்னவனே! யானை முகத்தவனே! முத்திநலம்
சொன்னவனே! தூயமெயச் சுகத்தவனே! மன்னவனே!
சிற்பரனே! ஐங்கரனே! செஞ்சடையஞ் சேகரனே!
தற்பரனே! நின்தாள் சரண்.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்து உன்க்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்

அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்,
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்

சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்தே

திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து,
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்,
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே



உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி,
ஐம்புலன் றன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத் திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே,
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே,

இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்,
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி,
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்,
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,

மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்

சண்முக தூலமுஞ் சதுர்முகச் சூட்சமும்
எண்முக மாக இனிதெனக்கு அருளிப்,
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்,
கருத்தினிற் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனிதெனக் கருளி,

என்னை அறிவித், தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தி, என்செவியில்

எல்லை இல்லா ஆனந் தமளித்(து)
அல்லல் களைந்தே, அருள்வழி காட்டிச்,
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்,
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி,
அணுவிற் கணுவாய் அப்பாலுக்கு அப்பாலய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்,
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்,
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.

திருச்சிற்றம்பலம்



திருஞானசம்பந்த நாயனார்

**முதலாந் திருமுறை**

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடை ஏறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்
தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய
பெம்மா னிவனன்றே.

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

தாயுநீயே தந்தைநீயே சங்கரனே யடியேன்
ஆயுநின்பால் அன்புசெய்வான் ஆதரிக்கின் றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னுள் ஐவர்நின்றொன் றலொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவலம்மே யவனே.

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாஎனவுந் நக்காஎனவும் நம்பாஎன நின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனந கராரே.

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாந் திருமுறை

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே

வேதத்திலுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திரு ஆல வாயான் திருநீறே

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயன் திருநீறே

காண இனியது நீறு கவினைத்தருவது நீறு
பேணி அணிவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே.

### கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளிப்ங்கன் விடம்உண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறுநல்ல நல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



### திருவலஞ்சுழி

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னநீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாராப்
பன்னியாதரித் துஏத்தியும் பாடியும் வழிபடு மதனாலே.

## மூன்றாந் திருமுறை

### திருவாடுதுறை

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதொழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.

இதுவோ எமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே.

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினு முனகழல் விடுவேனல்லேன்
தாழிளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே.

இதுவோ எமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே.

### திருக்கழுமலம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில்நல் லதுறும் கழுமலர் வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே

### நமச்சிவாய திருப்பதிகம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருள் ளாவது
நாதன்நாமம் நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருப்பாசுரம்**

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## நான்காம்திருமுறை

திருநாவுக்கரசு நாயனார்

திருச்சிற்றம்பலம்

**திருஅதிகை வீரட்டானம்**

கூற்றாயினவாறு விலக்க கிலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும் பிரியாது
வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆன்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை யம்மானே.

சலம் பூவொட தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாலும் என்நாவில் மறந்தறியேன்
உலர்ந்தார் தலையிற் பலிகொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலைந்தேன் அடியேன் அதிகைக்கெடில
வீரட்டானத்துறை யம்மானே

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே



இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

**திருவையாறு**

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறியாதன கண்டேன்

**திருக்கச்சியேகம்பம்**

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை எம்மனத்தே வைத்தேனே.

காயமே கோயில் ஆகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மை ஆக மனமணி இலிங்கம் ஆக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டி னோமே.

குனித்த புருவமுங் கொவ்சைச் செவ்வாயிற்
குமிண் சிரிப்பும்,
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண்ணீறும்,
இனித்த முடைய எடுத்த பொற்பாதமுங்
காணப் பெற்றால்,
மனிதப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் திருமுறை

திருநாவுக்கரசு நாயனார்

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கும் மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

அல்லல் என்செய்யும் அருவினை என்செய்யும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செய்யும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லாதோ ரடிமைபூண் டேனுக்கே.

**திருமருகல்**

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

**திருக்குறுந்தொகை**

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூச வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீ ராடிலென்
எங்கும் ஈசனெனாதவர்க் கில்லையே



வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே

## ஆறாம் திருமுறை

திருநாவுக்கரசு நாயனார்

திருச்சிற்றம்பலம்

**திருவாரூர்**

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

**திருஆரூர்**

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருப்புகலூர்**

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

**திருவையாறு**

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும் நீ
யொருகுலமஞ் சுற்றமும் ஓருரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய் நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ யேறூர்ந்த செல்வன் நீயே!

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடங்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டக்காலே.



## ஏழாம் திருமுறை

திருநாவுக்கரசு நாயனார்

திருச்சிற்றம்பலம்

பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தால்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அத்தாவுனக் காளாய்இனி அல்லேன் எனல் ஆமே.

மற்றுப்பற்றெனக் கின்றிநின் திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாததன்மை வந்தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே.

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழ பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

தம்மையேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறுங் கூறையும்
ஏத்தலாம்இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுறவில்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச்செய்த

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதக் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏக னநேக னிறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே யவன் றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்

கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்



எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்தள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகலவந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
அஞ்ஞானனந் தன்னை யகல்விக்கு நல்லறிவே

ஆக்க மளவுறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் யழிப்பா யருள்தருவாய்
போகஃகுவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பி
னாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதுநின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றாளே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளனே

அப்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே யந்த நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக:கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்மைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



**திருப்புலம்பல்**

உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கறாறரை யான் வெண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத் அமர்ந்து உறையும் கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்து உருக வேண்டுவனே.

**திருவாசகச் சிறப்பு**

தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

திருச்சிற்றம்பலம்

## ஒன்பதாம் திருமுறை

திருவிசைப்பா - சேந்தனார்

திருச்சிற்றம்பலம்

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

**கருவூர்த்தேவர்**

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுரநகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கணான்மறைநூல் சகலமுங் கற்றொர்
சாட்டியக் குடியிருந்தருளும்
எங்கணாயகனே போற்றி ஏழிருக்கை
இறைவனே போற்றியே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருப்பல்லாண்டு - சேந்தனார்**
சீருந் திருவும் பொலியச் சிவலோகநாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன; பெற்றதார் பெறுவார்உலகில்?
ஊரும் உலகுங் கழற உளறி உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாம் திருமுறை

திருமந்திரம் - திருமூலர்
திருச்சிற்றம்பலம்

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே.

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே.

## பதினோராம் திருமுறை

பட்டினத்தார் பாடல்கள்
திருச்சிற்றம்பலம்

கல்லாப் பிழையும் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்நின் னஞ்செழுத்தை
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருளாய் கச்சி யேகம்பனே.

**நக்கீரர்**
முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.



உன்னை ஒழிய உருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடிய வினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே

**கபிலதேவநாயனார்**
விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## பன்னிரண்டாம் திருமுறை

பெரியபுராணம் - சேக்கிழார்
திருச்சிற்றம்பலம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றுந்
திருந்து சாத்து விகமே ஆக
விந்து வாழ் சடையான் ஆடும்
ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

உலகுஎலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வெணியன்
அலகுஇல் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

அருணகிரிநாதர்

திருச்சிற்றம்பலம்

கைத்தல நிறைகனி அப்பமொ டவால்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞான மொழி பேசுமுக மொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம் பணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா



வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வைய நீடுக; மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாம் தழைத் தோங்குக;
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளார் மடியார் அவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

**கச்சியப்பர்**

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

**இளமுருகனார்**

வேதம் வெல்லுக மெய்மை விளங்குக
நீதி ஓங்குக நீணிலம் எங்கணும்
பூதி பொங்குக கண்மணி பூக்குக
நாதன் ஐந்தெழுத்து ஊறுக நாவெலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மங்களம் ஜெய மங்களம் - யோகர் சுவாமிகள்**

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத் தன்னா லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுகட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
தொண்டர்சீர் பரவிய சேக்கிழார்க்கு மங்களம்
எங்குந் தங்கும் உயிர்களுக்கு மங்களம்
மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

திருச்சிற்றம்பலம்



**நவகிரஹத்தினை சுற்றுகிறோம். அப்பொழுது ஒன்பது சுற்று வரவேண்டும். ஒன்பது கிரஹத்தின் காயத்ரீ மந்திரங்களை சொல்லி சுற்றி வருவது நவக்கிரக தோஷங்களை போக்கும்.**

**சூரியன்**

ஓம் அச்வத் வஜாயவித்மஹேஹ
பாச ஹஸ்தாயதீமஹி
சந்தோ சூர்யப்ரசோதயாத்

**சந்திரன்**

ஓம் வீரத் வஜாய வித்மஹே
விகந ஹஸ்தாயே தீமஹி
தந்தோ பௌமப்ரசோதயாத்

**புதன்**

ஓம் கஜத் வஜாய வித்மஹே
கச ஹஸ்தாயே தீமஹி
தந்நோ புத்ப்ரசோதயாத்

**குரு**

ஓம் வ்ருஷபத் வஜாய
வித்மஹே
கருணி ஹஸ்தாய தீமஹி
தந்நோ குரு ப்ரசோதயாத்

**சுக்கிரன்**

ஓம் அச்வத் வஜாய் வித்மஹே
தனுர் ஹஸ்தாய தீமஹி
தந்நோ சுக்ர ப்ரசோதயாத்

**சனீஸ்வரன்**

ஓம் காகத் வஜாய வித்மஹே
கடக ஹஸ்தாய தீமஹி
தந்நோ மந்த ப்ரசோதயாத்

**ராகு**

ஓம் நாகத் வஜாய வித்மஹே
பத்ம ஹஸ்தாய தீமஹி
தந்நோ ராகு ப்ரசோதயாத்

**கேது**

ஓம் அச்வத் வஜாய வித்மஹே
சூல ஹஸ்தாய தீமஹி
தந்நோ கேது ப்ரசோதயாத்

நவகிரஹ வழிபாடு முடிந்ததும் ஸ்ரீ சண்டேஸ்வரரை வணங்க வேண்டும்.

**ஸ்ரீ சண்டேஸ்வரர் காயத்ரீ**

ஓம் சண்ட சண்டாய் வித்மஹே
சண்டேஸ்வராய தீமஹி
தந்நோ கண்ட ப்ரசோதயாத்

வழிபாடுகள் முடிந்தபின் உணவருந்த செல்லுதல் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராய சுவாமிகள்

## கந்தர் சஷ்டி க்வசம்

### காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ் செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக. மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரஹண பவனார் சடுதியில் வருக!
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி



விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணபவ வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியும் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பு ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளி பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க



நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்ம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித் தொடா தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்



கடிவிட விஷங்கள் கடிதுய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்(து) அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனைக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென்மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துட அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்



மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்கள் உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

(கந்தசஷ்டி கவசம் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன அமைதி

மன அமைதிக்கு நாம் முதலில் நாம் யார்? நாம் எங்கிருந்து வந்தோம்? என்பதை அறிய வேண்டும். இந்த உடல் பஞ்சதத்து - வத்தால் ஆனதும் அழியக்கூடியதும் ஆகும். இந்த உடலை இயக்குபவர் ஆத்மா. ஆத்மா அசரீரியான ஓர் அனாதியான ஒளிப்புள்ளி நட்சத்திர வடிவானது. நெற்றியின் புருவமைய சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர். அத்தோடு அமரத்துவம் ஆனவருமாகும். இந்தப் படத்தை முதலில் நாம் உறுதியாக்கிக் கொண்டால் ஆத்ம உணர்வு அடைவது மிக இலகுவாகும். எனவே ஒன்று சரீரம், மற்றது ஆத்மா என்பதை மிகத் தெளிவாக அனுபவம் செய்ய வேண்டும்.

மேற்கொண்டு நாம் முன்னேறும் போது, இந்தச் சரீரத்துக்க பிறப்புக் கொடுக்கின்ற தந்தை இருக்கின்றாரோ, அவ்வாறே ஆத்மாவுக்கும் தந்தை இருக்கின்றார். ஆத்மாவின் தந்தையே கடவுள், பரமாத்மா, பரம்பொருள், பரமசிவன், அல்லது நீங்கள் எவ்வகையில் அழைக்கின்றீர்களோ அவ்வகையில் அழைக்கப்படுகின்றார். ஆத்மா சரீரத்தில் வசித்தாலும் புறக்கண்களுக்கத் தெரிவதில்லை. அவ்வாறே மனிதர்கள் அனைவரினதும் முழுவுலகினதும் தந்தையும் அசரீரியானவர், எனவே புறக்கண்களால் அவரைப் பார்க்க முடியாது. அவர் இந்த உலகத்திற்கு அப்பாலுள்ள பரந்தாமத்தில் வசிக்கிறார்.

நாம் எங்கிருந்து இவ்வுலகிற்க வந்தோம்? என்ற கேள்வி சில வேளைகளில் எழுகின்றது. எமது பெற்றோர் எமக்குப் பிறப்புக் கொடுத்திருந்தாலும் இந்தச் சரீரத்திலுள்ள ஆத்மா எங்கிருந்து வந்தார் இந்த உலகத்திற்கு அப்பால் வெகு தொலைவில் உள்ள பரந்தாமததிலிருந்தே ஆத்மா வந்தார். இந்த ஞானம் தந்தையால் எமக்குக் கொடுக்கப்பட்டது. அவரே அதி உயர்ந்தவரும் சர்வ சக்திவானுமாவார். இந்தச் சர்வ சக்திவானோடு தொடர்பு ஏற்படும் போது சக்தியும் ஒளியும் கிடைக்கின்றது. இச்சக்தியைப்



பெறுவதற்கான வழிமுறை முதலில் உங்கள் பக்தியின் மூலமாக அவரைச் சரியாகத் தெரிந்து கொள்வதும் இரண்டாவதாக அவரை நினைவு கொள்வதும் அவரைத் தெரிந்து கொண்டு செய்வதுமாகும். அவரைத் தெரிந்து கொண்டு அவரை நினைவு செய்யுங்கள். நீங்கள் சக்தியைப் பெறுவீர்கள். ஆனால் கடவுள் சர்வசக்திவான், அதி உயர்ந்தவர் என்ற ஞானம் இருக்க வேண்டும். நாம் இந்த விழிப்புணர்வில் இருப்போமாயின் இது ஆத்மா உணர்வு அல்லது இறையுணர்வு என அழைக்கப்படுகிறது. ஆத்மா உணர்விலும் இறை உணர்விலும் இருக்க முடியுமாயின் நீங்கள் எப்பொழுதும் அமைதியாக இருப்பீர்கள். இதனையே நாம் மன அமைதி என அழைக்கின்றோம்.

இந்த வகையில் அமரர் உயர்திரு தில்லையம்பலம் சிவசம்பு அவர்களின் ஆத்மா சாந்தி அடையவும், அவரது குடும்பத்தவர்கள் மன அமைதி பெறவும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

''எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்''

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

எல்லாப் புகழும் இறைவனுக்கே

**அமரர் உயர்திரு தில்லையம்பலம் சிவசம்பு அவர்களின் வாழ்க்கை வரலாறு.**

இந்துமா கடலின் முத்தென விளங்கும் இலங்கைத் தீவின் சிரசாகிய யாழ்ப்பாணத்தின் கண்ணாக விளங்குவது காரைநகர் ஆகும். இது ஈழ திருநாட்டின் வட பகுதியில் உள்ள யாழ்ப்பாணத்தில் இருந்து 11 மைல் தொலைவில் உள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் இம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற ஈழத்துச் சிதம்பரம் என்னும் புண்ணிய தலத்தை கொண்டு விளங்கும் எழில்மிகு காரைநகரில் கருங்காலிக் குறிச்சியில் உயர் சைவ வேளாலகுலத்தில் தோன்றிய சின்னத்தம்பி தெய்வானை தம்பதிகளின் மகன் தில்லையம்பலத்திற்கும் (பிரபல சுருட்டு வர்த்தகர்) அவ்வூர் வலந்தலையைச் சேர்ந்த பொன்னம்பலம் பொன்னம்மா தம்பதிகளின் மகள் இராசம்மாவுக்கும் சிரேஷ்ட புத்திரனாக உயர்திரு சிவசம்பு அவர்கள் 08.06.1933 இல் வலந்தலையில் பிறந்தார்.

இவரது தம்பிமார் அமரர் தேவராசா, விசுவலிங்கம், அமரர் தருமலிங்கம், நாகேஷ்வரி, இரத்தினேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோராவார். இவரை தம்பிமார், தங்கைமார் அண்ணர் என்று அன்பாக அழைப்பார்கள்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை இலகடி வலந்தலை தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர்கல்வியை வலந்தலை இந்துக் கல்லூரியிலும் பயின்றார். உயர்கல்வியில் தேர்ச்சி பெற்று Technical Qualification



மூலமாக கொழும்பு-8, பொரளையில் உள்ள இலங்கை அச்சுக் கூட்டுத்தாபனத்தில் Chief Assistant Head Reader ஆக 1953இல் வேலை பெற்று சேவை புரிந்தார். இவர் தன்னுடன் சேவைபுரிந்த நண்பர்கள் எல்லோரோடும் அன்புடனும், பண்படனும், மதிப்புடனும் பழகி நற்பெயர் பெற்றார்.

''மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு''

என்ற திருவள்ளுவரின் திருக்குறளுக்கு ஏற்ப இல்லறமாம் நல்லறத்தில் ஈடுபடுவதே பெருமைக்குரியது என்பதை உணர்ந்த பெற்றோர் இவரது 24வது வயதில் அவ்வூர் வாரிவளவைச் சேர்ந்த சாமி கந்தையா கணபதியம்மா (நாத்தாண்டி பிரபல வர்த்தகர்) தம்பதிகளின் இளையமகள் பாக்கியம் அவர்களுக்கு முறைப்படி திருமணம் பேசி 1957ஆம் ஆண்டு கார்த்திகை 7ஆம் திகதி திருமணம் செய்து வைத்தனர்.

இல்லறத்தை நல்லறமாய் நடாத்தி இருந்தோம்பி இல்வாழ்வாவது எல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு என்ற திருவள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப விருந்தோம்பி அனைவருடனும் இன்முகத்துடன் உறவாடி மகிழ்ந்திருந்தார் நன்கலம் நன்மக்கட் பேறு என்பதற்கு இணங்க சிவபாதசுந்தரம், சிவமணி, பாலேந்திரா, திலகவதி, புஸ்பவதி, கலாதரன் ஆகிய பிள்ளைகளை பெற்றெடுத்து சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தார்.

இவர் தனது பிள்ளைகளுக்கு உரிய பருவத்தில் ஏடு தொடக்கி ஆரம்பக் கல்வியை தான் வசித்திருந்த இடங்கலான கொழும்பு, நீர்கொழும்பு, கொச்சிக்கடை, காரைநகர் போன்ற இடங்களில் உள்ள சிறுவர் பாடசாலைகளில் கற்க வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது சிரேஷ்ட மகள் சிவமணியின் உயர்கல்வியை வலந்தலை இந்துக்கல்லூரியிலும் மருதனாமடம் இந்து மகளிர் கல்லூரியிலும் கற்க வைத்தார். இவரது திருமண வயது வந்ததும் 21வது வயதில் அவ்வூர் காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பார்வதி தம்பதிகளின் கனிஷ்ட்ட புத்திரன் ஏரம்புவுக்கு முறைப்படி திருமணம் பேசி 1982ஆம் ஆண்டு திருமணம் செய்து வைத்தார். இவர்களது திருமணம் காரைநகரில் நடைபெற்றது. இவர்களின் இல்லற வாழ்வில் நோமலதா, கபில்தேவ், ஐஸ்வர்யா ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.

இவர் தனது 2வது மகள் திலகவதியின் உயர்கல்வியை வியாவில் சைவ மகாவித்தியாலயத்தில் கற்கவைத்தார் திருமண வயது வந்ததும் இவரது 22வது வயதில் அவ்வூர் காரைநகர் கோவளத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை அன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் இரத்தினசோதிக்கு முறைப்படி திருமணம் பேசி 1987ம் ஆண்டு செய்து வைத்தார். இவர்களது திருமணம் காரைநகரில் நடைபெற்றது. இவர்களின் இல்லற வாழ்வில் நிரஞ்சனா, முகுந்தன் ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.

இவர் தனது சிரேஷ்ட மகன் சிவபாதசுந்தரத்தின் உயர்கல்வியை வலந்தலை இந்து கல்லூரியில் கற்க வைத்தார். பின்பு இவர் 1973ம் ஆண்டு தனது தாய் மாமனாரின் வியாபாரஸ்தாபனத்தில் தொழில் செய்தார் திருமண வயது வந்ததும் இவரது 30ஆவது வயதில் அவ்வூர் காரைநகர் புது றோட்டைச் சேர்ந்த தில்லையம்பலம் நல்லம்மா தம்பதிகளின் கனிஷட்ட புத்திரி அன்னபாக்கியத்திற்கு முறைப்படி திருமணம் பேசி 1988இல் செய்து வைத்தார். இவர்களது திருமணம் காரைநகரில் நடைபெற்றது. இவர்களின் இல்லற வாழ்வில் அனுஷியா, தர்ஷன், ஜனகன் ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.



இவர் தனது கனிஷ்ட புத்திரி புஸ்பவதியின் உயர்கல்வியை வலந்தலை இந்துக்கல்லூரியில் கற்க வைத்தார். திருமண வயது வந்ததும் இவரது 21வது வயதில் அவ்வூர் களபூமி சத்திரந்தையைச் சேர்ந்த சுப்பிரமணியம் நேசரட்ணம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் செல்வரட்ணத்திற்கு முறைப்படி திருமணம் பேசி 1990இல் செய்து வைத்தார். இவர்களது திருமணம் காரைநகரில் நடைபெற்றது. இவர்களின் இல்லற வாழ்வில் கஜரூபா, சிந்துரூபன், சிறிகபிலா ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார்.

இவர் தனது 2வது மகன் பாலேந்திராவின் கல்வியை வியாவில் சைவ மகாவித்தியாலயத்தில் கற்க வைத்தார். பின்னர் இவர் 1978ம் ஆண்டு தனது தாய் மாமனாரின் வியாபார ஸ்தாபனத்தில் தொழில் செய்து வந்தார். திருமண வயது வந்ததும் இவரது 33வது வயதில் அவ்வூர் களபூமி திக்கரையை சேர்ந்த தர்மலிங்கம் அன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி இந்திராவுக்கு முறைப்படி திருமணம் பேசி 1996ம் ஆண்டு செய்து வைத்தார். இவர்களது திருமணம் கொழும்பில் நடைபெற்றது. இவர்களின் இல்லற வாழ்வில் குலமதி, சிவராஜினி ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தார். இவரது மகன் கலாதரன் திருமணத்திற்கு வேண்டிய பொருளாதார உதவிகளை செய்து இவரது வாழ்க்கையில் உதவியாக இருந்தார்.
இவர்கள் புதுரோட் காரைநகரில் தம்பி கலாதரன் இல்லத்தில் வாழ்ந்து வருகிறார்கள்.

இவர் தனது கனிஷ்ட புத்திரன் கலாதரனின் உயர்கல்வியை காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் கற்க வைத்தார். பின்னர் 1988ம் ஆண்டு கொழும்பு நகர் சென்று புறக்கோட்டையில் உள்ள தனியார் வர்த்தக நிறுவனம் ஒன்றில் வேலை பெற்று Sale Assisstant, Cashier ஆக பணி புரிந்தார் பின்பு 1994ம் ஆண்டு இங்கிலாந்து சென்று அங்குள்ள வர்த்தக நிறுவனங்களில் Sales Assistant, Cashier ஆக பணிபுரிந்து வந்தார், திருமண வயது வந்ததும் இவரது 29வது வயதில் காரைநகர் பலுகாட்டைச் சேர்ந்த திருவாதிரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தினனேஸ்வரி தம்பதிகளின் (தனது 2வது தங்கையின் மகள் கனிஷ்ட புத்திரி ரஞ்ஜினி B.Sc in Economics Studied at Queen Mary University of London, M.Sc in Economics Studied at University of Surry in England ) முறைத் திருமணத்தை தனது தம்பியார் விசுவலிங்கம் குடும்பம்பத்தினர் மூலமாக செய்து வைத்தார். இவர்களது திருமணம் இங்கிலாந்தில் நடைபெற்றது. இவர்களின் இல்லற வாழ்வில் 15.05.2010 இல் வசீகரன் என்னும் கடைசி முறைப் பேரனையும் கண்டு பெருமகிழ்வடைந்தார்.

இவரது இளைய மகன் கலாதரன் 1988ம் ஆண்டு உழைக்க ஆரம்பித்த காலத்தில் இருந்து தனது தாய் தந்தையருக்கு பொறுப்பாக இருந்து இவர்களது இறுதிக்காலம் வரை அவர்களுக்கு தேவையான பொருளாதார உதவிகளைச் செய்து வந்தார். இவர் 2006 நாடு திரும்பியதும் தனது தாய் தந்தையரை கவனித்து பராமரித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும், இறுதிக் கடமைகளையும் மிகச் சிறப்பாக செய்து வைத்தார். இது மட்டுமன்றி தனது அண்ணன்மார், அக்காமார் உதவி கோரிய போதும் அவர்களுக்கும் வேண்டிய பொருளாதார உதவிகளைச் செய்து வந்தார். இப்படியாக குடும்பத்தவர்களுக்கு இளைய மகன் கலாதரன் செய்த உதவிகளைக் கண்டு இவரது தாய் தந்தையர் பெருமகிழ்சியடைந்தார்கள். இவர் 13 ஜூலை 1983இல் ஏற்பட்ட இனக்கலவரத்தின் காரணமாக தனது கடமைக்காலம் முடிந்து ஓய்வு பெறும் காலம் வருவதற்கு முன் சேவையில் இருந்து ஓய்வு பெற்று அரச ஓய்வூதியம் பெற்று வந்தார்.

இவர் தனது வாழ்வில் ஆடம்பரம் இல்லாமல் எழிமையாக வாழ்ந்துவந்தார். மற்றவர்களின் பணத்திற்கும், பொருளுக்கும் ஆசைப்படாமல் மற்றவர்களிடம் கடன் கேளாமல் தன் வருமானத்திற்கு ஏற்ப சிக்கனமாக வாழ்ந்தார் தனது மனைவி வழி மாமா, மாமி, மைத்துனர்மார், மைத்துனி, சகலன், சகலிமாருடன்



அன்புடனும் பண்புடனும் மதிப்புடனும் உறவாடி மகிழ்ந்து நற்பெயர் பெற்று வாழ்ந்தார். மனைவி பிள்ளைகள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் எல்லோரோடும் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும், மதிப்புடனும், இன்முகத்துடனும் உறவாடி மகிழ்ந்து வந்தார். தம்பிமார் குடும்பம், தங்கைமார் குடும்பத்தினருடன் அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் மதிப்புடனும் வாழ்ந்து பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் பாத்திரமாக விளங்கி வந்தார்.

இவரது தந்தையார் தில்லையம்பலம் 1958 ஆண்டு இடம் பெற்ற இனக் கலவரத்தின் போது தனது ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்த வேளை பொல்காவலையில் வைத்து சிங்களகாடையர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார். இதனால் நினைவிழந்த இவரை பாதுகாப்பு படையினர் சிகிச்சைக்காக கொழும்பு அரச பொது மருத்துவமனையில் சேர்த்தார்கள். சம்பவத்தைக் கேள்வியுற்ற இவரும் இவரின் தம்பியாரும் வைத்தியசாலைக்கு சென்று தந்தையாரைக் கவனித்து வந்தார்கள். பின்பு சிகிச்சையை முடித்துக்கொண்டு அவரை பம்பலப்பிட்டி சரஸ்வதி முகாமில் சில நாட்கள் தங்கவைத்து பின்பு கப்பல் மூலமாக காங்கேசன்துறைக்கு வந்து காரைநகருக்கு அழைத்துச் சென்றனர். இத்தாக்கம் காரணமாக நோய்வாய்ப்பட்ட இவரது தந்தை நவம்பர் 1959இல் சிவபதமடைந்தார். பின்பு தந்தையின் ஸ்தானத்தில் இருந்து தனது தம்பிமார், தங்கைமார்களையும் அன்புடன் கவனித்து அவர்களின் திருமணச் சடங்குகளையும் அவரின் தாய்மாமன் நவரத்தினத்தின் விருப்பத்திற்கு ஏற்ப முறைப்படி திருமணங்களை பேசி செய்து வைத்தார், அவர்களின் நல்வாழ்வைக் கண்டு மகிழ்ந்தார்.

1965இல் தம்பி தேவராசா கஷ்டத்தில் வந்து உதவி கோரிய போது தன்னிடம் பணம் இல்லாதபடியால் தனது மனைவியின் நகைகளை உதவியாக கொடுத்து அவரது கஷ்டத்தை தீர்த்து வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக நல்ல எண்ணம், இரக்க மனப்பான்மை உள்ள உயர்திரு சிவசம்பு அவர்கள் மற்றவர்களும் வாழ வேண்டும் என்ற விருப்பம் உடையவர்.

1989இல் நோய்வாய்ப்பட்டு சிவபதம் அடைந்த தனது இளைய தம்பி தர்மலிங்கத்தின் மரணச் சடங்கினை முன்நின்று நடத்தினார். தன்னால் இயன்ற உதவிகளையும் அவரது குடும்பத்தாருக்கும் செய்தார். ''பணம் இருப்பவர்களிடம் உதவுவதற்கு மனம் இருக்காது, மனம் இருப்பவர்களிடம் உதவுவதற்கு பணம் இருக்காது" என்பது போல் மற்றவர்களின் கஷ்டத்திற்கு உதவி செய்வதற்கு தன்னிடம் திருப்தியான பணம் இல்லையே என்று கவலைப்படுவார்.

உயர்திரு சிவசம்பு அவர்கள் அன்பு, அருள், அடக்கம், இன்சொல், ஈகை, வாய்மை, பொறுமை, பணிவு, ஒப்புரவு, விருந்தோம்பல், பணியாற்ற முன்னிற்றல், முயற்சி, பிறர்நலம் பாராட்டல், பண்பு, அமைதி, விட்டுக் கொடுத்தல் முதலிய நற்குணங்கள் நிரம்பப் பெற்றவர்

இவர் கடமையில் கண்ணியமும் கட்டுப்பாடும் உடையவர், உறவினர்கள், நண்பர்கள், சமூகத்தினர் ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றவர். சுயநலம், கோபம், பிடிவாதம் இல்லாத இவர் எல்லோரோடும் விட்டுக் கொடுத்து வாழும் மனப்பான்மை உடையவர். போட்டி, பொறாமை, ஆணவம், செருக்கு வஞ்சகம், பெருமை, புகழ், தற்பெருமையற்றவர்.

இளவயதினிலேயே இறைபக்தி அதிகம் உள்ள இவர் எப்போதும் இறைவனின் தேவாரம், திருவாசகம், தோத்திரங்களை ஓதி வழிபடுவார். இலங்கையில் உள்ள திருத்தலங்களுக்கும், இந்தியாவில் உள்ள திருத்தலங்களுக்கும் தனது மனைவியாருடன் சென்று வழிபட்டு வந்தார்.



இவரது தம்பி விசுவலிங்கம் தேவார, திருவாசக, தோத்திரத் திரட்டு, சைவநெறி போன்ற புத்தகங்களை ஒவ்வொரு முறையும் அனுப்பி வைப்பார். தம்பி விசுவலிங்கம் இவருடன் தொடர்பு கொண்டு சுகங்களையும், புதினங்களையும் விசாரித்து கொள்வார். இவரது தங்கைமாரும் இவரது சுகங்களையும் செய்திகளையும் விசாரித்து கொள்வார்கள். தம்பி தேவராசா இறப்பதற்கு முன்பு இவருடன் தொடர்பு கொண்டு சுகங்களை விசாரித்தறிந்தார்.

இவர் வடக்கு கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட யுத்தத்தால் 1991ம் ஆண்டு ஏப்ரல் 25ம் திகதி தனது மனைவியுடனும் சின்னப்பிள்ளை மாமியுடனும் காரைநகர் கருங்காலியை விட்டு இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம், அராலி, தின்னைவேலி, மூளாய், சாவகச்சேரி, நல்லூர் ஆகிய இடங்களில் உள்ள உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்தார். சிக்கலான கால கட்டத்திலும் தனது தந்தையின் சகோதரி சின்னப்பிள்ளை மாமியையும் அன்புடன் பராமரித்து வந்தார். நாட்டின் மோசமான சூழ்நிலைக்கு மத்தியில் தன்னால் இயன்ற முழு உதவிகளையும் மாமிக்கு செய்து வந்தார். நாட்டின் சூழ்நிலை படு மோசமாக இருந்தபடியால் மாமியின் சம்மதத்துடன் அவரை கைதடி வயோதிபர் பராமரிப்பு நிலையத்தில் சேர்த்தார். நாட்டில் ஏற்பட்ட கொடிய யுத்தத்தால் தனது மாமியை இறுதிவரைக்கும் பராமரிக்க முடியவில்லையென்று இவர் அடிக்கடி கவலைப்படுவார்.

இவர் தனது தாய்நாட்டின் சட்ட திட்டங்களை மதித்து வாழ்ந்தவர். நாட்டில் கொடிய யுத்தம் நடைபெற்ற போதும் தான் பிறந்த தாய்நாட்டை விட்டு அந்நிய நாட்டுக்கு புலம் பெயராமல் தனது தாய் நாட்டுக்குள்ளேயே புலம் பெயர்ந்து இறுதி வரைக்கும் வாழ்ந்து வந்தார். பின்பு இவர் இளைய மகன் கலாதரனின் அழைப்பை ஏற்று தனது மனைவியுடன் 1995இல் கொழும்பு நகருக்கு நிரந்தரமாக இடம்பெயர்ந்து விடுதியில் வாடகைக்கு அறை எடுத்து வாழ்ந்து வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் இளைய மகன் கலாதரனின் 131A2/1, புதுச் செட்டித் தெரு கொழும்பு 13 கலாபவனத்தில் இருவருமாக குடிபுகுந்து இறுதிவரைக்கும் வாழ்ந்து வந்தார்கள். மகன் கலாதரன் இவர்களுக்கு வேண்டிய சகல செலவுகளுக்கும் பொருளாதார உதவிகள் செய்து வந்தார்.

இவரது இரண்டாவது மருமகன் இரட்ணசோதி சுகவீனமாக இருந்த காலங்களில் தனது மனைவியாருடன் சென்று உடல் நலங்கள் விசார்த்து வந்தார். பின்பு இவர் 2003ல் சிவபதம் அடைந்ததும் மரணச் சடங்குகளை முன்னின்று சிறப்பாக நடாத்தினார். இக்கால கட்டத்தில் இவரது மகன் கலாதரன் மரணச் சடங்குகளுக்கு வேண்டிய பொருளாதார உதவிகளைச் செய்து வைத்தார். பின்பு இவரும் மனைவியும் மகள் திலகவதி, பேரப்பிள்ளைகளுடன் சில மாதங்கள் தங்கியிருந்தார்கள் அங்குள்ள காலநிலை குளிராக இருந்தபடியால் கொழும்புக்கு திரும்பி வந்தார்கள்.

இவர் 1997ல் அல்சர் நோயால் பாதிக்கப்பட்டு பின்பு கொழும்பு சுலைமான் தனியார் மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சை செய்து குணமடைந்து வாழ்ந்து வந்தார். இதற்குரிய மருத்துவச் செலவுகளுக்கு மகன் கலாதரன் பொருளாதார உதவிகளைச் செய்தார். 2005இல் தனது மனைவி சுகவீனமடைந்து இருந்த காலத்தில் இவரின் கடமைகளையும் உதவிகளையும் அன்புடன் சிறப்பாக பராமரித்து வந்தார். உடல்நலம் குன்றியிருந்த இவரது மனைவி தனது 72வது வயதில் 30.06.2006 வெள்ளிக்கிழமை காலை 8.20 மணியளவில் சிவபதமடைந்தார். இவர் பிரியும் போது இவரும் இவரது இளையமகன் கலாதரனும் அருகில் இருந்தார்கள். இவவின் மரணச்சடங்குகளையும் முன்னின்று மிகச்சிறப்பாக நடாத்தினார்.



இவர் ஆகஸ்ட் 2006இல் Prostate நோயால் பீடிக்கப்படடு மகரகம வைத்தியசாலையில் கதிர்வீச்சு மூலமாக சிகிச்சை பெற்று நோயை குணப்படுத்தி வாழ்ந்து வந்தார். பின்னர் 2007இல் கேணியாவால் ஏற்பட்ட புண் வருத்தத்திற்கு நவலோக தனியார் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்து குணமடைந்து வாழ்ந்து வந்தார். இதற்குரிய மருத்துவச் செலவுகளுக்கு மகன் கலாதரன் பொருளாதார உதவிகளைச் செய்தார்.

பின்பு செப்ரம்பர் 2009இல் இவருக்கு சலம் அடைப்பு ஏற்பட்டது உடனடியாக அப்பலோ மருத்துவ மனையில் பரிசோதனை செய்த போது சல வாசலில் Prostate வளர்ந்துள்ளதால் அடைப்பு ஏற்பட்டதாக வைத்தியர்கள் கூறினார்கள். பின்பு இதற்குரிய சிகிச்சைகளை களுபோவில மருத்துவமனையில் செய்தும் சிகிச்சை பூரணமாக வெற்றியளிக்கவில்லை. காரணம் Prostate சல வாசலின் உட்பகுதி சிறுநீர்ப்பைக்குள் பரவிவிட்டதாக வைத்தியர்கள் கூறினார்கள். பின்பு இவருக்கு இரத்தம் சுத்திகரிப்பு 2 தடவை செய்தார்கள், சலம் போகாத படியால் ராகமை வைத்தியசாலைக்கு மாற்றம் செய்து அங்குள்ள வைத்தியர்களால் சலம் வெளியேற்றுவதற்கு சிறுநீரகங்களின் இடது வலது பகுதிகளில் stents tube வைத்து சிறுநீர் சல வாசலில் tube வைத்து அதனூடாக வெளியேறுவதற்கு வழிசெய்தார்கள். இறுதியில் இப்படியாக வாழ்ந்து வந்த இவர் மாதம் தோறும் மகரகம வைத்தியசாலை சென்று ஊசி போட்டு வந்தார். இவரது முழுக்கடமைகளையும் இவரது மகன் கலாதரன் பொறுப்பேற்று மிகவும் சிறப்பாக பராமரித்து வந்தார். 11 மாதங்கள் வீட்டோடு படுக்கையில் வாழ்ந்த இவர் 12 ஜுலை 2010 நல்இரவு 11.30 மணியளவில் மூச்சு இழுப்பு ஏற்பட்டது. இதனை அவதானித்துக் கொண்டிருந்த மகன் கலாதரன் உடனடியாக அன்புலன்ஸ் வண்டியை அழைத்து கொழும்பு அரச மருத்துவமனையில் சேர்த்தார். அங்கு இவருக்கு ஒட்சிசன், மருந்துகள் வழங்கப்பட்டும் மூச்சு இழுப்பு குணமடையவில்லை. இந்நிலையிலும் நல்ல நினைவில் இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு இவரைப் பார்க்க வந்த உறவினர்களை யார் வந்திருக்கின்றார்கள் என்று மகன் கலாதரன் கேட்டபோது அவர்களின் பெயரை மாத்திரம் கூறி அழைத்தார். இப்படியாக மூன்று நாட்கள் மருத்துவ மனையில் இருந்த இவர்

''அன்பறிவு தேற்றம் அவாவின்மை
இந் நான்கும் நன்குடையான் கட்டே தெளிவு'' என்ற

திருவள்ளுவரின் குறளுக்கு உதாரணமாக சைவத்தமிழ் மகனாக வாழ்ந்தார். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து மற்றவர்களும் நல்லவண்ணம் வாழ வழிகாட்டி 15.07.2010 ஆனி 31ம் நாள் பூர்வபக்க அமிர்தசித்த சதுர்த்தி அன்று வியாழக்கிழமை காலை 9.27 மணியளவில் பிள்ளைகள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்களை விட்டு தனது 77வது வயதில் இவ் உலகை விட்டுப் பிரிந்து சிவனடி சேர்ந்தார். இவர் பிரியும் போது இவரது மகன் கலாதரன் அருகில் இருந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைந்து முத்திபெற வேண்டி எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவருளை வேண்டி வழிபடுவோமாக.

''எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தேன் எம் பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்''

சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரு மாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே

(திருமூலர் திருமந்திரம்)

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



## வாழ்க்கைச் சுவடு

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு.தில்லையம்பலம் சிவசம்பு |
| பிறப்பிடம் | : | வலந்தலை, காரைநகர் |
| வசிப்பிடம் | : | கருங்காலி, காரைநகர் |
| இறுதி வசிப்பிடம் | : | 131A2/1, கலாபவனம், புதுச்செட்டித்தெரு, கொழும்பு-13 |
| தொழில் | : | Chief Assistant Head Reader Govt.Press, Borella, Colombo-8 |
| தந்தை | : | தில்லையம்பலம் (பிரபல சுருட்டு வர்த்தகர்) |
| தாய் | : | இராசம்மா |
| தம்பிமார் | : | அமரர் தேவராசா, விசுவலிங்கம், அமரர் தர்மலிங்கம் |
| தங்கைமார் | : | நாகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, இராஜேஸ்வரி |
| திருமணம் | : | வாரிவளவு, காரைநகர் |
| மனைவி | : | பாக்கியம் |
| பிள்ளைகள் | : | சிவபாதசுந்தரம், சிவமணி, பாலேந்திரா, திலகவதி, புஷ்பவதி, கலாதரன் |
| மருமகன்கள் | : | ஏரம்பு, அமரர் இரத்தினசோதி, செல்வரட்ணம் |
| மருமகள்கள் | : | அன்னபாக்கியம், இந்திரா, ரஞ்ஜினி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சந்ததிப் பேரன்மார் | : | தர்ஷன், ஜனகன், வசீகரன் |
| பேத்திமார் | : | நோமலதா, ஐஸ்வர்யா, நிரஞ்சனா, அனுஷியா, கஜரூபா, ஸ்ரீகபிலா, குலமதி, சிவராஜினி. |
| பேரன்மார் | : | கபில்தேவ், முகுந்தன், தர்ஷன், சிந்துரூபன், ஜனகன், வசீகரன் |
| மைத்துனர்மார் | : | மகேசன், திருவாதிரை, கணேசமூர்த்தி, சதாசிவம், அமரர் வைத்திலிங்கம், சோமசுந்தரம், அமரர் நமசிவாயம் |
| மைத்துனிமார் | : | ஞானாம்பிகை, வடிவழகாம்பாள், அமரர் இந்திராணி, தெய்வானை |
| சகலன் | : | அமரர் சுப்பிரமணியம் |
| சகலிமார் | : | இராசலட்சுமி, பாலாமணி, பரஞ்சோதி, மனோன்மணி |
| சம்பந்திமார் | : | தில்லையம்பலம்+நல்லம்மா<br>வேலுப்பிள்ளை+பார்வதி<br>தர்மலிங்கம்+அன்னம்மா<br>வேலுப்பிள்ளை+அன்னம்மா<br>சுப்பிரமணியம்+நேசரட்ணம்<br>திருவாதிரை+இரத்தினேஷ்வரி |



## நன்றி நவிலல்

எமது ஆருயிர் தந்தையும், மதிப்புமிகு மாமனாரும், பாசமிகு தாத்தாவும், அன்பு மிகு அண்ணரும், மதிப்புமிகு மைத்துனரும், மதிப்புமிகு சகலனுமாகிய அமரர் உயர்திரு தில்லையம்பலம் சிவசம்பு அவர்கள் 15.07.2010 காலை 9.27 மணியளவில் இறைவனடி சேர்ந்த சோகச் செய்தி அறிந்து எமது இல்லம் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி, தந்தி ஊடாக அனுதாபம் கூறியவர்களுக்கும் இறுதியில் ஜெயரட்ண மலர்ச்சாலைக்கு வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் வெளியூரில் இவரது தம்பி விசுவலிங்கம் வீட்டில் ஒன்று கூடி அஞ்சலி வழிபாடு செய்த அன்பு உள்ளங்களுக்கும் அந்தியேட்டி கிரியைகள், வீட்டுக் கிரியைகள், ஆத்மாசாந்தி வழிபாட்டுப் பூசைகளில் பங்கு பற்றியவர்களுக்கும் மதியபோசன நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் மேற்படி கிரியைகளை சைவமுறை வழுவாது முறைப்படி நடாத்திய அந்தணச் சிவாச்சாரியார்களுக்கும் மற்றும் எமக்கு ஆதரவாக நின்று உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி வணக்கம்

இவ்வண்ணம்
அன்னாரின் பிள்ளைகள் குடும்பத்தினர்
கலாபவனம்
131A2/1, புதுச் செட்டித்தெரு
கொழும்பு - 13.
தொ.பே. 011-2387832



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சா வழி

சின்னத்தம்பி + தெய்வானை
பொன்னம்பலம் + பொன்னம்மா

தில்லையம்பலம் + இராசம்மா

காசிநாதர் + தெய்வானைப்பிள்ளை
ஆறுமுகம் + சீதேவிப்பிள்ளை

கந்தையா (சாமி) + கணபதியம்மா

**சிவசம்பு**
தேவராசா
விசுவலிங்கம்
தர்மலிங்கம்
நாகேஸ்வரி
இரத்தினேஷ்வரி
இராஜேஸ்வரி

சதாசிவம்
தெய்வானை
வைத்திலிங்கம்
**பாக்கியம்**
சோமசுந்தரம்
பொன்னம்பலம் (நமசிவாயம்)

சிவபாதசுந்தரம் + அன்னபாக்கியம்
அனுஷியா
தர்ஷன்
ஜனகன்

சிவமணி + ஏரம்பு
நோமலதா
கபில்தேவ்
ஜஸ்வர்யா

பாலேந்திரா + இந்திரா
குலமதி
சிவராஜினி


திலகவதி + இரத்தினசோதி
நிரஞ்சனா
முகுந்தன்


புஷ்பவதி + செல்வரட்ணம்
கஜரூபா
சிந்துரூபன்
ஶ்ரீகபிலா


கலாதரன் + ரஞ்ஜினி
வசீகரன்




1993


15.05.2010


1995


1997


1988




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ,அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையதை எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
  அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ,
  அது நாளை மற்றொருவருடையாகிறது.
- மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியாகும்.



Printed by : Vakmee Printer, 258/3, Dam Street, Colombo -12. Tel : 2421987

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org